## பத்திரிக்கை செய்தி

## தற்காலிக மின்இணைப்பு வழங்குவதற்காக லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் இளநிலை பொறியாளர் அவர்களுக்கு தண்டனை விதித்து தீர்ப்பு

புகார்தாரர் கடந்த 2008ம் வருடம், தான் சென்னையில், அம்பால் நகர், அஸ்தினாபுரத்தில் புதிதாக கட்டிய வீட்டிற்கு தற்காலிக மின்இணைப்பு வழங்குவதற்காக மின் பகிர்மான மற்றும் உற்பத்தி கழகம், அஸ்தினாபுரம் பிரிவு சென்னை தெற்கில் விண்ணப்பித்திருந்தார். திரு.ஜான்சன் தேவக்குமார், முன்னாள் இளநிலை பொறியாளர், முதல் தரம், மின் பகிர்மான மற்றும் உற்பத்தி கழகம், அஸ்தினாபுரம் பிரிவு, சென்னை தெற்கு அவர்கள் புகார்தாரரிடம் தற்காலிக மின்இணைப்பு வழங்குவதற்காக தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டு 10.10.2008 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, பொறிவைப்பு நடவடிக்கையில் திரு.ஜான்சன் தேவக்குமார், முன்னாள் இளநிலை பொறியாளர், புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.5,000/-யை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 30.08.2023 எதிரி திரு.ஜான்சன் தேவக்குமார், முன்னாள் இளநிலை பொறியாளர், சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் மூன்று ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனையும், ரூ.20,000/- அபராதமும், அபாராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 6 மாதங்கள் சிறை தண்டனையும் மற்றும் சட்டப்பிரிவு u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988-ன் படி மூன்று ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனையும், ரூ.20,000/- அபராதமும், அபாராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 6 மாதங்கள் சிறை தண்டனையும் ஏக காலத்தில் அனுபவிக்க விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.